# கூட்டு இஜ்திஹாத்: நடைமுறையிலுள்ள சில ஒழுங்கீனங்களும் அவற்றுக்கான முன்மொழிவுகளும்

N.M. Abdul Aleem[1], A.R. Zayeem[2]

Faculty of Islamic Studies, Jamiah Naleemiah, Beruwala, Sri Lanka.
aleem8329@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாம் ஓர் இறையியல் மார்க்கமாகும். எனவே அது தன்னகத்தே பல்வேறுபட்ட தனிச் சிறப்புப் பண்புகளை கொண்டுள்ளது. அதில் மிக முக்கியமானதோர் பண்பு தான் இம்மார்க்கம் எல்லா காலத்திற்கும் எல்லா இடங்களுக்கும் பொருந்தி செல்கின்ற தன்மையை கொண்டது. இச்சிறப்புப் பண்பு இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகள் தொடக்கம் சட்டவாக்கம், சிவில் வாழ்க்கை முறைமைகள், கொடுக்கல் வாங்கல் என எல்லா பகுதிகளிலும் பிரதிபலிக்கிறது. அந்த வகையில் இஸ்லாமிய சட்டவாக்கத்தின் முக்கிய பொறிமுறை இஜ்திஹாத் எனும் அமைப்பு இஸ்லாம் எல்லாக் காலத்திற்கும் எல்லா இடத்திற்கும் பொருத்தமானது என்பதனை மேலும் உறுதிப்படுத்துவதுடன், இஸ்லாத்தின் நிலைபேரான தன்மையையும் உறுதிசெய்கிறது. மேலும் இஜ்திஹாத் அக்தரி, சுகூதி என பல்வேறு முறைமைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் முறைகளில் நவீன முறைமைதான் கூட்டு இஜ்திஹாத் எனும் அமைப்பாகும். இம்முறைமை ஏனைய முறைமைகளை விட நம்பகத் தன்மை கொண்டதாகவும், பிழைகளை விட்டும் பாதுகாப்பான அமைப்பாக இருப்பதுடன், தற்காலத்தில் எழும் சட்ட பிரச்சினைகளுக்கான இஸ்லாமிய தீர்வுகளை முன் வைப்பதிலும் இஸ்லாத்தை நவீனமான முறையில் முன்வைப்பதிலும் முக்கிய இடம் வகிக்கிறது.

**திறவுச் சொற்கள்:** தனிநபர் இஜ்திஹாத், கூட்டு இஜ்திஹாத்

## ஆய்வு அறிமுகம்

இஸ்லாமிய சட்டவியல் பொறிமுறைகளில் இஜ்திஹாத் மிக முக்கிய அந்தஸ்தையுடையது. இது இஸ்லாத்தின் தனிச் சிறப்பம்சமாக இருப்பதுடன் இஸ்லாத்தை எக்காலத்துக்கும் ஏற்ற வகையில் முன்வைப்பதில் முக்கிய இடம் வகிக்கிறது. இஜ்திஹாத் என்ற அரபுப்பதம் கடுமையானதொரு பிரயத்தனத்தில் மேற்கொள்வது என பொருள்படும். அதாவது ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழும் புதிய பிரச்சினைக்கான தீர்வை குர்ஆன், சுன்னா நேரடியாக கூறாத போது அச்சட்டப் பிரச்சினைக்கான தீர்வை குர்ஆன், சுன்னா அடிப்படையில் முஜ்தஹித்களால் பெறப்படும் தீர்வையே இஜ்திஹாத் என்ற சொல்லின் மூலமாக நாடப்படுகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் பிரயத்தனம் கூட்டாக பல அறிஞர்களின் முயற்சியோடு அமைந்தால் இம் முயற்சியை நாம் கூட்டு இஜ்திஹாத் என்று அழைப்போம். நாம் வாழும் இந்த நவீன யுகமானது பல்வேறுபட்ட சிந்தனைகளையும் சித்தாந்தங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். அது எல்லா விடயங்களிலும் தர்க்கபூர்வமான நிறுவல்களையும், அறிவுபூர்வமான ஆதாரங்களையும் வேண்டி நிற்கின்றதோர் யுகமாகும். எனவே இக்காலத்தில் இஸ்லாம் மார்க்கத்தை முன்வைப்பது கட்டாயமாக அறிவுபூர்வமாக அமைவதுடன் தற்காலத்தில் எழுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அறிவு ரீதியாக முன்வைக்க வேண்டும். அப்போது தான் இம் மார்க்கம் அனைவரினதும் கவனயீர்ப்பை பெறும். இந்த வகையில் இஸ்லாம் தன்னகத்தே கொண்டிருக்கும் இஜ்திஹாத் என்ற பொறிமுறை இப்பணியை மிகச் சிறப்பாக மேற்கொள்கிறது.

மேலும் இவ் இஜ்திஹாத் தற்கால பிரச்சினைகளுக்கான அறிவு ரீதியான தீர்வுகளை முன் வைப்பதுடன் இச்சட்ட பிரச்சினைகளைத் தாண்டி இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டையும் மற்றும் இன்னோரன்ன விடயங்களையும் இக்காலத்திற்கு ஏற்ப அறிவு ரீதியாகவும் தர்க்க அடிப்படையிலும் முன்வைப்பதில் முக்கிய இடம் வகிக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த கூட்டு இஜ்திஹாத் முன்னெடுக்கப்படுகின்ற பொழுது அது இன்னும் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்துகிறது.

இப்பின்னணியில் இவ்வாய்வானது கூட்டு இஜ்திஹாத் பற்றிய அறிமுகம், குர்ஆனில் ஸுன்னாவில் உள்ள ஆதாரங்கள் கூட்டு இஜ்திஹாத் தின் முக்கியத்துவம், கூட்டு இஜ்திஹாதின் வளர்ச்சிக் கட்டங்கள், தற்காலத்தில் கூட்டு இஜ்திஹாத் நடைமுறைபடுத்தப்படும் முறைமைகள், இம்முறைமைகள் எதிர்நோக்குகின்ற சவால்களும் அவற்றுக்கான சில முன்மொழிவுகள் போன்ற பகுதிகளை ஆய்வு பரப்பாக கொண்டுள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

அல்குர்ஆன், சுன்னா தீர்வு சொல்லாத புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்வதற்கு இஸ்லாமிய சட்டவியல் கொண்டுள்ள மிக முக்கியமானதோர் பொறிமுறைதான் கூட்டு இஜ்திஹாத் என்ற அமைப்பாகும். இன்றளவில் இதனது நடைமுறையில் சில ஒழுங்கீனங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ் ஒழுங்கீனங்கள் இம்முறைமையை இஜ்திஹாத் என்ற வட்டத்தை விட்டும் வெளியே கொண்டு செல்கின்றது. இவ்வாறு கூட்டு இஜ்திஹாதில் தற்போதைய நடைமுறையில் உள்ள ஒழுங்கீனங்கள் என்ன? மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் என்ன என்பதையே இவ் ஆய்வு ஆய்வுப் பிரச்சினையாக கொண்டுள்ளது.

**ஆய்வு நோக்கங்கள்**

1) கூட்டு இஜ்திஹாத் என்றால் என்ன? என்பது பற்றி தெளிவான அறிமுகத்தை தருதல்.
2) இஸ்லாமிய சட்டவியல் பொறிமுறையில் இது எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது?
3) தற்காலத்தில் நிலவுகின்ற அதனது அவசியப்பாட்டை தெளிவுபடுத்தல்.
4) தற்கால இஸ்லாமிய உலகில் இதனது நடைமுறைகள் எவ்வாறு இருக்கின்றன? அதில் உள்ள ஒழுங்கீனங்கள் என்ன? அதற்கான தீர்வுகள் என்ன?

**ஆய்வு முறையில்**

இவ் ஆய்வானது இஜ்திஹாத் சம்பந்தமாகவும் அதேபோல் கூட்டு இஜ்திஹாத் சம்பந்தமாகவும் வெளிவந்துள்ள நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் போன்ற இரண்டாம்தர தரவுகளை மையப்படுத்தியே கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

இஸ்லாத்தின் சட்டவாக்கப் பொறிமுறையான கூட்டு இஜ்திஹாத் பற்றியும் அதன் முக்கித்துவம், அதன் நடைமுறை பற்றியும் பல இஸ்லாமிய அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். உதாரணமாக

கூட்டு இஜ்திஹாத் செயன்முறை – பிர்னாஸ் அஷ்ரப்

அல் இஜ்திஹாதுல் ஜமாஈ - கலாநிதி அஹ்மத் ரய்ஸூனி

அல் இஜ்திஹாதுல் ஜமாஈ அஹம்மியதுஹூ பீ நவாஸிலில் அஸ்ர் - ஷெய்க் ஸாலிஹ் பின் ஹமீத்

ஆனால் இவை எதுவும் இன்றளவில் கூட்டு இஜ்திஹாத் நடைமுறைப்படுத்தப்படுகின்றன முறைகளில் மிக முக்கிய முறையான நிறுவன மயப்படுத்தப்பட்ட முறைமை நடைமுறையில் எதிர்நோக்குகின்ற சவால்கள் தொடர்பாக அதிகம் பேசவில்லை. இச் சவால்களை பொறுத்தவரையில் இவை இந்நிறுவனங்களின் கூட்டு இஜ்திஹாத் என்ற அம்சத்தை முழுமையாக இல்லாமல் செய்து விட்டு இந்நிறுவனங்களில் பெயரளவில் மாத்திரம் கூட்டு இஜ்திஹாத் என்ற அம்சத்தை இருக்க செய்கிறது. அந்த வகையிலே எனது இந்த ஆய்வானது கூட்டு இஜ்திஹாத் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவன மயப்படுத்தப்பட்ட இம்முறைமை எதிர்நோக்குகின்ற சவால்கள் மற்றும் ஒழுங்கீனங்கள் என்ன என்ற பகுதியை மிகப் பிரதானமாக ஆய்வுப் பரப்பாக கொண்டுள்ளதுடன் அவற்றுக்கான சில முன்மொழிவுகளும் முன்வைக்கப்படுகின்றன. அம்முன்மொழிவுகள் அடிப்படையில் கூட்டுத் இஜ்திஹாத் இடம் பெறுகின்ற பொழுது கூட்டு இஜ்திஹாத் நிறுவனங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற இஸ்லாமிய சட்டவாக்கப் பணியை சரிவர செய்ய முடியுமாய் இருக்கும்.

**கூட்டு இஜ்திஹாத் ஒரு சுருக்க அறிமுகம்**

கூட்டு இஜ்திஹாத் எனும் பிரயோகம் நவீன காலத்துக்கு உரியது. எனவேதான் இது தொடர்பான வரைவிலக்கணங்கள் ஆரம்பகால இமாம்களிடம் காண முடியாதுள்ளது. என்றாலும் இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் இக்கூட்டு இஜ்திஹாத் என்ற சொற்பிரயோகம் பயன்படுத்தப்படாமல் அதனை குறிக்கின்ற செயற்பாடுகள் இடம் பெற்றிருப்பதை தெளிவாக அவதானிக்க முடியும்.

நவீன காலத்தில் பல அறிஞர்கள் கூட்டு இஜ்திஹாத் பற்றிய கோட்பாடு ரீதியான சிந்தனைகளையும், கருத்துக்களையும் முன்வைத்துள்ளனர்.

ஆனால் அவை இஜ்திஹாதிற்கான முழுமையான வரைவிலக்கணமாக அமையவில்லை. பின்னால் வந்த அறிஞர்கள் ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து தவறுகளை சுட்டிக்காட்டி தமது அவதானங்களை இணைத்து கூட்டு இஜ்திஹாதிற்கு தமது வரைவிலக்கணங்களை சொல்ல முற்பட்டனர்.

எனவே இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களை இரு வகையாக நோக்கலாம்.

இஜ்மா என்ற ரீதியில் சிலர் அறிமுகப்படுத்தியுள்ளனர். முஜ்தஹித் பிரயோகிக்கின்ற ஒரு முயற்சி என்ற ரீதியில் அறிமுகப்படுத்தினர்.

**இஜ்மா என்ற ரீதியில் அமைந்துள்ள வரைவிலக்கணங்கள்.**

- அலி ஹஸ்புல்லா:- முஜ்தஹித் ஒரு குறிப்பிட்ட விவகாரத்தில் ஒரு கருத்தில் உடன்படுகின்ற இஜ்திஹாதே கூட்டு இஜ்திஹாத் என அழைக்கப்படும்.
- அப்துல் ஹலீல் அபூஃத்:- முஹம்மத் (ஸல்) அவர்களுடைய உம்மத்தின் பெரும்பாலான முஜ்தஹித்கள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்டதொரு விவகாரத்தில் ஒரு ஷரீஆ சட்டத்தில் உடன்படுவதாகும்.[112]
- அப்துல் மஜீத் ஷர்கி:- பெரும்பான்மையான சட்ட மேதைகள் சட்டம் பெறுகின்ற வழிமுறையை பயன்படுத்தி ஷரீஆ சட்டம் ஒன்றை பெறுவதற்காக கடுமையாக முயற்சித்து பரஸ்பரம் கலந்துரையாடலுக்குப் பிறகு ஒரு சட்டத்தில் அவர்கள் அனைவரும் அல்லது பெரும்பான்மையானவர்கள் உடன்படுவது ஆகும்.[113]
- ஹாலித் ஹுஸைன் ஹாலித்:- நீதியான சட்ட மேதைகளை உள்ளடக்கியதோர் குழுவினர் அறிவார்ந்த ரீதியிலான விதிமுறைகளை கொண்ட ஒரு முறைமையின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்வதில் தமது முயற்சியை ஒவ்வொருவரும் தனித்தனியாக செலவழித்து பின்னர் குறிப்பிட்டதொரு அவையில் தமக்கு மத்தியில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு ஒரு தீர்மானத்திற்கு வருவதையே இது குறிக்கும்.[114]

எனவே இவ்வரைவிலக்கணங்களை தொகுத்து நோக்கும்போது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்த முடியும். புதிய பிரச்சினை ஒன்றுக்கான சட்டரீதியாக தீர்வை பெறுவதற்கு முஜ்தஹித்கள் ஆய்வினை அடிப்படையாகக்கொண்ட கலந்துரையாடல்கள் துறைசார் நிபுணர்களின் உதவிகளின் அடிப்படையில் தமக்கிடையே ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்கான முயற்சியையே இது குறிக்கும்.

**கூட்டு இஜ்திஹாதிற்கான அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னா ஆதாரங்கள்**

இஸ்லாமிய சட்டவியலின் ஒவ்வொரு பொறிமுறையும் குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் இருந்து பெறப்பட்டவை. இஸ்லாமிய சட்டவியல் ஒவ்வொரு பொறிமுறையும் தனது அடிப்படையே குர்ஆன் சுன்னாவில் இருந்து கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். இந்த வகையில் கூட்டு இஜ்திஹாத் என்ற பொறிமுறையும் குர்ஆன் சுன்னாவில் இருந்து பெறப்பட்ட ஓர் முறையாகும்.

**அல்-குர்ஆன் ஆதாரங்கள்**

கலந்தாலோசனை, கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளல் தொடர்பாக பேசுகின்ற குர்ஆன் ஆயத்துக்கள் கூட்டு இஜ்திஹாதையே வலியுறுத்துகின்றன என தப்சீர் துறை அறிஞர்கள் விளக்கம் அளிக்கின்றனர். இதற்கான ஆதாரமாக சூரா ஆல இம்ரானின் 159 ஆவது வசனத்தை கூறலாம். அதில் ''அவர்களை மன்னிப்பீராக! அவர்களுக்காகப் பாவ மன்னிப்புத் தேடுவீராக! காரியங்களில் அவர்களுடன் ஆலோசனை செய்வீராக!'' அதேபோன்று சூரதுஸ்

---

[112] அல் இஜ்திஹாதுல் ஜமாஈ அஹம்மியதுஹு பீ அஸ்ரில் ஹதீஸ், ஆய்வுச் சஞ்சிகை, பக்:215

[113] அல் இஜ்திஹாதுல் ஜமாஈ பித் தஷ்ரீஇல் இஸ்லாமி, அப்துல் மஜீத் அஸ்-ஸுஸஹ் அஸ்-ஸரபி, ரிஆஸதுல் மஹாகிம் அஸ்-ஸரஇய்யா-கட்டார், பக்:46

[114] மஜல்லதுல் முஸ்லிம் அல் முஆஸிர்- மலர்:115 பக:42

ஷூராவின் 38வது வசனம் பின்வருமாறு கூறுகிறது "அவர்களுடைய விடயங்களில் கலந்தாலோசணை அடிப்படையிலேயே அமைந்திருக்கும்"

இவ்விரு ஆயத்துக்களில் வரும் "ஷூரா" கலந்தாலோசணை என்ற சொல்லானது மார்க்க மற்றும் உலக விடயங்களில் குர்ஆன், ஸூன்னாவின் நிழலில் கூட்டாலோசணை, ஆய்வின் அடிப்படையில் தீர்வுக்கு வர வேண்டும் என்பதனை தூண்டுகிறது.

இஸ்லாமிய சட்டவியலில் இச்செயற்பாடு கூட்டு இஜ்திஹாத் என்று குறிப்பிடப்படும். இதனை இன்னும் உறுதிப்படுத்தக் கூடிய வகையில் சூரா நிஷாவின் 83 வது வசனம் அமைந்துள்ளது அதில் "பாதுகாப்பு பற்றிய இச்செய்திகளை இறைத்தூதரிடமும் தங்களில் அதிகாரம் உள்ளவர்களிடமும் கொண்டு சென்றிருந்தால் அதை ஆய்வு செய்வோர் அதனை அறிந்து கொள்வார்". இவ்வசனத்தில் ஆய்வு செய்வோர் என்பதனை சுட்டிக்காட்ட பயன்படுத்தப்பட்டுள்ள (يستنبطون) சொல்லானது இஜ்திஹாத் செய்வதனை குறிப்பிடுகின்றது என இமாம் குர்துபி விளக்கமளிக்கிறார்.[115] கூட்டு இஜ்திஹாத் செய்வதனை இச்சொல் சுட்டி நிற்கிறது என்று இருந்தால் அவ் இஜ்திஹாதை அதிகாரத்தில் உள்ளவர்கள் கூட்டாக செய்ய வேண்டும் எனவும் இவ்வசனம் ஏவுகிறது. ஏனெனில் இஜ்திஹாத் செய்வதனை குறிக்கும் சொல் (يستنبطون) என பன்மையிலேயே வந்துள்ளது. எனவே இவற்றின் அடிப்படையில் நோக்குகின்றபோது இவ்வசனம் மிகத்தெளிவாக மக்களின் விடயங்களில் அதிகாரத்தில் உள்ளவர்கள் கூட்டு இஜ்திஹாதின் அடிப்படையில் தீர்வுகளை பெறவேண்டும் என்று ஏவுகின்றன.

**அஸ்-ஸூன்னா ஆதாரங்கள்**

நபியவர்களின் ஏராளமான ஹதீஸ்கள் கூட்டு இஜ்திஹாத் என்ற இப்பொறிமுறையை அனுமதிப்பதுடன், புதிய விடயங்களுக்கான (குர்ஆன், சுன்னாவில் இல்லாத விடயங்களுக்கான) தீர்வுகள் கட்டாயம் கூட்டு இஜ்திஹாத் அடிப்படையிலேயே பெறப்பட வேண்டும் எனவும் ஏவுகின்றது.

உதாரணமாக, அலி ரழி அவர்கள் கூறுகின்றார்கள்: நான் நபி (ஸல்) அவர்களிடம் பின்வருமாறு வினவினேன். குர்ஆனும், சுன்னாவும் தீர்வு சொல்ல ஒரு விடயம் எம்மிடையே ஏற்பட்டால் அவ்விடயத்துடன் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? அதற்கு நபியவர்கள் உங்களில் மார்க்க விடயங்கள் பற்றி அறிவுடையோரை அதற்கு பொறுப்பாக ஆக்கிவிடுங்கள். மேலும் அவர்கள் தங்களிடையே அவ்விடயம் தொடர்பாக ஆலோசணை செய்து முடிவுக்கு வரட்டும். மேலும் நீங்கள் அவ்விடயம் தொடர்பாக அவர்களில் ஒருவருடைய கருத்தை கொண்டு மட்டும் தீர்ப்பளிக்க வேண்டாம்.[116]

இப்னு அப்பாஸ் (ரழி)அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஸூரா ஆலஇம்ரானில் 109வது வசனம் இறங்கியது. நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். நிச்சயமாக அல்லாஹ்வும் ரஸூலும் இவ்விடயத்தை விட்டும் தேவையற்றவர்கள். என்றாலும் அல்லாஹ் ஷூரா என்ற இவ்விடயத்தை எனது உம்மத்தினருக்கு ரஹ்மத் ஆக்கியுள்ளான். எனவே எனது

[115] இமாம் குர்துபி- தப்ஸீர் ஜாமிஉல் அஹ்காம்- பாகம்:5- பக்:296
[116] இமாம் இப்னுல் கையிம்- பீ அ.ஃலாமி முவக்கிஈன்- பாகம்:02 பக்:351

உம்மத்தினர் யார் கலந்தாலோசணையின் அடிப்படையில் தீர்வைப்பெற்றுக்கொள்கின்றார்களோ அவர்கள் நேர்வழி பெற்றவர்கள். யார் தீர்வுகளின் போது புறக்கணிக்கின்றார்களோ அவர்கள் அல்லாஹ்வின் விடயங்களில் அத்துமீறியவர்கள் போன்றவர்கள்.[117]

மேலே குறிப்பிட்ட இரண்டு ஹதீஸ்களிலும் மிகத்தெளிவாக கூட்டு இஜ்திஹாதை வலியுறுத்துகிறது. முதலாவது ஹதீஸ் இஸ்லாமிய தீர்வுகள் எப்போதும் கூட்டு இஜ்திஹாத் அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்று கூறுவதுடன் இரண்டாவது ஹதீஸ் இது முஸ்லிம் சமூகத்தினருக்கான அல்லாஹ்வின் பிரேத்தியேகமானதோர் அருளாக கூட்டு இஜ்திஹாதை கூறுவதுடன் முஸ்லிம் சமூகத்தின் நேர்வழிக்கான வழியாகவும் இதனை அடையாளப்படுத்துகிறது. நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் வழிகாட்டல்களை வஹி மூலமாக பெற்ற போதிலும் கூட்டு இஜ்திஹாத் என்ற விடயத்தை புறந்தள்ளியவராக தனது கருத்தை மட்டும் அடிப்படையாகக்கொண்டு சமூக விடயங்களில் தீர்வுகளுக்கு வரவில்லை. மாற்றமாக புதிய பிரச்சினைகள், சமூக விடயங்கள் போன்றவற்றில் தனது தோழர்களிடம் கலந்தாலோசித்து கூட்டான ஓர் தீர்மானத்திற்கே வந்தார்கள். இதனை நபியவர்களின் ஹதீஸ்களிலும், அவர்களின் ஸீராவிலும் கண்டுகொள்ள முடியும். எனவே மேற்சொன்ன குர்ஆன், சுன்னா ஆதாரங்களின் அடிப்படையில் நோக்குகின்ற பொழுது கூட்டு இஜ்திஹாத் என்ற இப்பொறிமுறை நேரடியாக குர்ஆன், சுன்னாவில் இருந்து பெறப்பட்டது.

**கூட்டு இஜ்திஹாத் முக்கியத்துவம்**

இஸ்லாமிய சட்டவாக்க பொறிமுறைகளில் கூட்டு இஜ்திஹாத் அதிக முக்கியத்துவம் பெறுகின்றதோர் பொறிமுறையாக விளங்குகின்றது. அத்தோடு இஸ்லாத்தை தற்காலத்திற்கு ஏற்ப முன்வைப்பதிலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த அடிப்படையில் பின்வருகினற அடிப்படையில் கூட்டு இஜ்திஹாத் முக்கியத்துவம் பெறுகின்றது.

1. **ஒரு தனிமனிதர் எவ்வளவு பெரிய அறிவு பின்புலத்தை தன்னகத்தே கொண்டிருந்த போதும் அவருடைய கருத்தை விட ஒரு கூட்டத்தினரின் கருத்து சரியான விடயத்திற்கு மிக நெருக்கமானது.**[118]

ஏனெனில் மனிதன் எவ்வளவு பெரிய அறிவு படைத்தவனாக இருந்தாலும் அவனுக்கு அவனுடைய அறிவிலிருந்து குறைகள் கட்டாயம் மிகைக்கும். எனவே ஒரு தனிமனிதன் விடயத்தில் எல்லா பகுதிகளையும் அதற்கான மிகச்சரியான தீர்வை முன்வைக்க முடியாது. ஆனால் அதே விடயத்தை ஒரு அணியினர் ஆய்கின்ற போது ஒருவருக்குத் தெரியாத விடயங்கள் அடுத்தவர்களினால் வெளிப்படுத்தபபடும். அதே போன்று ஒருவர் குறிப்பிட்ட விடயத்திற்கு முன்வைக்கும் ஆதாரத்தை விட பலமான ஆதாரத்தை அடுத்தவர் முன்வைப்பார். அதே போன்று மூடலான விடயங்களும் கலந்துரையாடல் மூலமாக தெளிவுபடுத்தப்படும். இவ்வாறு கூட்டு இஜ்திஹாத் மூலமாக ஒரு தனிநபரின் இஜ்திஹாதின் போது வெளிப்படுகின்ற குறைகள் அனைத்தும் பரிபூரணப்படுத்தப்படுகிறது. இவ்வாறாக கூட்டு இஜ்திஹாத் மிகச்சரியானவற்றிக்கும் நல்லவற்றின்பாலும் வழிகாட்டும்.

[117] இமாம் இப்னு அதி- அல் காமில்- பாகம்:04 பக்:337
[118] ஷெ.்.பான் முஹம்மத் இஸ்மாஈல்- இஜ்திஹாத் ஜமாஇ- பக்:45

தற்காலத்தில் இதனது முக்கியத்துவம் இன்னும் அதிகரித்துள்ளது. குர்ஆன், சுன்னாவும் தீர்வு சொல்லாத நடைமுறை சார் பிரச்சினைகள் இக்காலப்பகுதியில் அதிகரித்துள்ள அதேவேளை இஸ்லாமிய சமூகத்தில் நிலவுகின்ற தன்மைகளும் இதனது முக்கியத்துவத்தை இன்னும் அதிகரித்துள்ளது. எனவே இவற்றுக்கான சரியான தீர்வு கூட்டு இஜ்திஹாத் என்ற வழிமுறையின் மூலமாக மாத்திரமே பெற முடியும்.

**2. ஒவ்வொரு துறையிலும் துறைசார் வல்லுனர்களை உருவாக்குதல்**

இதனை நாம் விளங்கக் கூறின், ஒரு விடயம் குறித்து கூட்டு இஜ்திஹாத் இடம் பெறுகிறது என்றால் அம்முயற்சியில் ஹதீஸ், தப்ஸீர், உஸூலுல் பிக்ஹ், உலுமுல் குர்ஆன் என இஸ்லாத்தின் ஒவ்வொரு கலைகளிலும் வல்லுனர்களின் ஒரு அணியினராலேயே மேற்கொள்ளப்படும், மேலும் இக்கூட்டு முயற்சியில் இஸ்லாமிய துறை அல்லாத வைத்தியம், பொறியியல், வானவியல் போன்ற துறைகளை சார்ந்த வல்லுனர்களும் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

இவ்வாறு ஷரீஆ துறை சார்ந்த மற்றும் ஷரீஆ துறை சாராத அனைத்து தரப்பு வல்லுனர்களையும் இணைத்துக்கொள்ளும் போதுதான் அது முழுமையான இஜ்திஹாத் என்ற அமைப்பையும் பெறும், அத்தோடு குறிப்பிட்ட விடயம் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டு மிகச்சரியான தீர்வையும் பெற முடியும். எனவே இந்த வகையில் நோக்கும் போது இக்கூட்டு இஜ்திஹாத் ஒவ்வொரு துறைசார் நிபுணர்களையும் தனது பொறிமுறைகளுக்குள் உள்வாங்குவதானது சமூகத்தில் துறைசார் நிபுணர்களின் உருவாக்கத்தில், சமூக விவகாரங்களில் அவர்களினது வகிபாகத்தை ஏற்படுத்துவதிலும் பாரியளவு பங்காற்றுகிறது.

**3. இஜ்மாவின் இடத்தை நிரப்பக் கூடியதாக கூட்டு இஜ்திஹாத் அமைகிறது.**

இஸ்லாமிய சமூகத்தின் மிக முக்கியமான தனிச்சிறப்பம். அது வழிகேட்டில் ஒரு போதும் ஒன்றுபடமாட்டாது, எனவே இந்த அடிப்படையிலேயே இஸ்லாமிய சட்டவியல் இஜ்மா மிக முக்கியமானதோர் ஆதாரமாகவுள்ளது. இஜ்மா என்பது நபியவர்களின் மரணத்தின் பின்னர் அவர்களின் உம்மத்தை சேர்ந்த ஒரு குறிப்பிட்ட காலப்பிரிவில் வாழும் அனைத்து முஜ்தஹித்களின் உடன்பாட்டை இது குறிக்கும் என்றால் பல்வேறுபட்ட காரணிகளினால் இவ்வுடன்பாட்டை பெறுவது சாத்தியமற்ற விடயமாக மாறியள்ளது.

இந்நிலையில் இவ்வுடன்பாட்டை ஓரளவேனும் கொண்டு வரக்கூடிய இந்த கூட்டு இஜ்திஹாத் இஜ்மாவினால் நிறைவேற்ற கடினமாக இருந்த உடன்பாட்டை சமுகத்திற்கு மத்தியில் ஏற்படுத்துவதில் திறன்பட செயல்பட்டு, இஜ்மா செய்யத்தவறிய வேலை கூட்டு இஜ்திஹாத் நிறைவேற்றி சமூகத்தில் இஜ்மாவின் இடத்தை பெற்றுள்ளது. ஸஹாபாக்களின் இஜ்மாவை இதற்கான உதாரணமாக குறமுடியும். இவர்கள் இஜ்மா மிக நுணுக்கமான முறையில் மேற்கொள்ளவில்லை. மாற்றமாக சமூகத்தில் தலைவர்களினதும், மூத்த அறிஞர்களினதும் உடன்பாட்டின் அடிப்படையிலும், அவர்களுக்கு இடையேயான கலந்தாலோசணையின் அடிப்படையிலுமே தீர்வுகள் பெறப்பட்டன. இஜ்மாவின் இடத்தை, அதனது தொழில்பாட்டை நிறைவேற்றக்கூடியதாக கூட்டு இஜ்திஹாத் அமைந்துள்ளது.

நாம் இதுவரை கூட்டு இஜ்திஹாத் குர்ஆன், ஸுன்னாவில் குறிப்பிட்ட சட்டத்திற்கு தீர்வு முன்வைக்கிறது என்ற அடிப்படையில் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது என்பதையே நோக்கினோம். இதுவல்லாமல் இன்னும் பல வழிகளிலும் இஜ்திஹாத் முக்கியத்துவம் பெறுகிறது.

**4. கூட்டு இஜ்திஹாத் முஸ்லிம் சமூகத்தை முரண்பாடு மற்றும் பிளவுகளை விட்டும் பாதுகாக்கும்.**

தற்கால சுழ்நிலையில் தனிநபர் இஜ்திஹாத் சமூகத்திடையே பிளவுகளை ஏற்படுத்தி சமூகத்தை கூறுபோடுகின்றது. ஏனெனில் இவ் இஜ்திஹாத் அந்த தனிநபருடைய பார்வையையும், உணர்வையுமே பிரதிபலிப்பதுடன், மேலும் சமூகத்தின் ஒரு பகுதியை மாத்திரம் கருத்தில் கொண்டு தீர்வு சொல்லப்படுகிறது. இது சமூகத்தில் பெருபான்மையினரை பாதிப்பதோடு சமூகத்தை கூறுபோடுகின்ற வேலையை செய்யும் இதே நிலையில் கூட்டு இஜ்திஹாத் நடைமுறைப்படுத்தினால் அது சமூகத்தின் எல்லா மட்டதினரையும் பிரதிபலிப்பதுடன், குறிப்பிட்ட விடயம் பல கண்ணோட்டங்களில் நோக்கப்பட்டு எக்காலத்திற்கும் ஏற்ப தீர்வு முன்வைக்கப்படும். இத்தீர்வு சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்தினரையும் பிரதிபலிப்பதால் சமூகத்தில் எல்லா மட்டங்களினதும் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், முழுச்சமூகத்தையும் இத்தீர்வு ஒற்றுமைப்படுத்துகிறது என்ற வகையில் கூட்டு இஜ்திஹாத் முக்கியம் பெறுகிறது.

**5. மூடப்பட்டிருந்த இஜ்திஹாத் வாயிலை மீண்டும் துறப்பதற்கு வழி வகுத்தது.**[119]

நபியவர்களின் காலம் தொடக்கம் இஸ்லாம் விரிவடைய ஆரம்பித்துவிட்டது. இவ்வாறு இஸ்லாம் விரிவடையும் போதெல்லாம் இஸ்லாம் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு மிகத்தெளிவான தீர்வை இஜ்திஹாத் முன்வைத்து, இஸ்லாம் எக்காலத்திற்கும் பொருத்தமானது என்பதை உறுதிபடுத்தியது. இவ்வாறு இஜ்திஹாத் பயன்பாடு மெல்ல மெல்ல அதிகரிக்க ஆரம்பித்து ஹி11,12நூற்றாண்டுகள் ஆகும்போது இஸ்லாம் கூறும் பெறுமானங்களுக்கும் அதனது வழிமுறைக்கும் முரணான பல இஜ்திஹாத்கள் முன்வைக்கப்பட்டன.

இதன் காரணமாக இஸ்லாத்தில் பல குழப்பங்களும் எழ ஆரம்பித்தது. எனவே அக்கால இமாம்கள் இஜ்திஹாத் வாயில் மூடப்பட்டுவிட்டது. இனிமேல் எவருக்கும் இஜ்திஹாத் செய்ய முடியாது என இஜ்திஹாதிற்கு தடை விதித்தனர். உண்மையில் இஜ்திஹாத் என்ற பகுதியில் ஏற்பட்ட குழப்பங்களே இவ்வாறான முடிவு கொண்டு சென்றது. இக்கூட்டு இஜ்திஹாத் என்ற இப்பொறிமுறை இஜ்திஹாத் என்ற பொறிமுறையில் பிழைகள் விடுவதை விட்டும் பாதுகாக்கிறது. எனவே இக்கூட்டு இஜ்திஹாத் இஜ்திஹாத் இடம் பெறுவதற்கான வழிமுறைகளை திறந்து தருகிறது.

---

119 ஷ.ஃபான் முஹம்மத் இஸ்மாஈல்- இஜ்திஹாத் ஜமாஇ- பக்:51

**கூட்டு இஜ்திஹாத் தோற்றமும், வளர்ச்சி கட்டங்களும்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்ந்த காலப் பிரிவு கூட்டு முறையில் துவக்க புள்ளியாக இருந்தது.

விவகாரங்கள் பற்றி அவர்களுடன் ஆலோசனை செய்வீராக! என்ற குர்ஆன் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனை செய்தல் சூரா அடிப்படை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூட்டு இஜ்திகாதிற்கான அடித்தளத்தை விட்டார்கள். ஸஹாபாக்களின் காலத்தில் மிகவும் பரவலான இம் முறை கையாளப்பட்டது. குலபாஉர் ராஷிதூன்கள் ஆட்சியைத் தொடர்ந்து படிப்படியாக சரிவை நோக்கிச் சென்ற முறை நடைமுறைக்கு உட்பட்ட பகுதிகள் முழுமையாக மறைந்து சென்றது. என்றாலும் பிற்பட்ட காலப்பகுதியில் குறிப்பாக கடந்த நூற்றாண்டு அளவில் இம்முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பல அறிஞர்கள் அழைப்பு விடுக்க தொடங்கினர். அதன் விளைவாக ஈடுபடும் சில நிறுவனங்கள், அமைப்புகள் தோன்றின. நாம் கூட்டு இஜ்திஹாதின் வரலாற்றை நான்கு பெரும் பகுதிகளாக, கால பிரிவுகளாக பிரித்து நோக்க முடியும்.

- முதலாவது காலப்பிரிவு: ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலப்பகுதி.
- இரண்டாவது காலப்பிரிவு: குலபாஉர் ராஷிதீன்களின் காலப்பிரிவு.
- மூன்றாவது காலப்பிரிவு: குலபாஉர்ராஷிதீன்களுக்கு பிற்பட்ட காலப் பிரிவு.
- நான்காவது காலப்பிரிவு: நவீன காலப் பிரிவு.

**முதலாவது காலப்பிரிவு: ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலப்பகுதி**

இஸ்லாத்தின் எல்லா பகுதிக்குமான அடிப்படை மற்றும் அவற்றின் ஆரம்பமும் நபியவர்களின் காலத்தில் அமைந்திருக்கிறது. புதிதாக தோன்றுகின்ற நடைமுறைகள், விவகாரங்கள, பிரச்சினைகள் என்பவற்றின் போதான நபி (ஸல்) அவர்களின் அணுகுமுறையை அவதானிக்கின்ற பொழுது ஆலோசனை செய்தல் என்ற செயல் முறையிலேயே அவற்றை கையாண்டிருக்கிறார்கள் என்பதனை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. ஷுரா செய்யுமாறு அல்லாஹுத்தஆலா விடுத்த கட்டளையை அவர்கள் அவ்வாறு ஏற்படுத்தினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தில் உலக விவகாரங்கள் மற்றும் மனித நலன் தொடர்புபட்ட அனைத்தும் ஆலோசனைணயின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டமையே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை என்று குறிப்பிடும் மார்க்க விடயங்களில் கூட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆலோசனை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று பல அறிஞர்கள் சொல்லும் கருத்தையும் அடையாளப்படுத்தி காட்டுகிறார்.

இந்த வகையில் கூட்டு இஜ்திஹாத் அடிப்படையில் நபியவர்கள் அதிகமாக சமூக விவகாரத்துக்கு தீர்ப்பு வழங்கியுமுள்ளார்கள். இவற்றுக்கான பல உதாரணங்கள் நபியவர்களின் வாழ்க்கை வரலாற்றில் உள்ளது. இவற்றுக்கான மிக முக்கியமான உதாரணமாக பத்ர் கைதிகள் விடயத்தில் நபியவர்களும் ஸஹாபாக்களும்

கலந்தாலோசணை செய்ததையும் குறிப்பிடலாம். பத்ர் போரின் வெற்றியை தொடர்ந்து 70க்கு மேற்பட்ட காபிர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் விடயத்தில் நாம் எவ்வாறு நடந்து கொள்ளலாம் என மூத்த ஸஹாபாக்களுடன், ஆனுபவம் உடையவர்களுடன் கலந்தாலோசணை செய்தார்.[120]

**இரண்டாவது காலப்பிரிவு: குலபாஉர் ராஷிதூன்கள் காலம்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தின் நீட்சியாக குலபாஉர் ராஷிதீன் காலத்திலும் நாம் கூட்டு இஜ்திஹாதை அடையாளப்படுத்த முடியும். புதிதாகத் தோன்றுகின்ற நிகழ்வுகள், பொது விவகாரங்களில் கூட்டாக இஜ்திஹாதின் அடிப்படையில் முடிவு எடுக்கின்ற முறைமை அமுலில் இருந்தது.[121] கூட்டு இஜ்திஹாத் மிகச்சிறந்த முறையில் நடைமுறைப்பட்ட கால பிரிவாக இக்காலப் பிரிவை வரலாறு பதிவு செய்கின்றது. நேர் வழியில் நடந்த நான்கு கலீபாக்களின் தீர்மானம் நிறைவேற்றும் பிரதான முறையாக இதுவே காணப்பட்டது. குறிப்பாக அபூபக்கர, உமர் ஆகியோர் இம் முறையை கையாள்வது பிரசித்தி பெற்றிருந்தனர். தனிநபர் இஜ்திஹாத் எனும் கலை தனிக்கலையாக தோற்றம் பெற முன்னரே கூட்டு இஜ்திஹாத் தோற்றம் பெற்று நடைமுறையில் இருந்துள்ளதாக வஹ்பா ஸுஹைலி எனும் அறிஞர் ஸஹாபாக்கள் காலத்தில் நடந்த நிகழ்வுகளை வைத்து குறிப்பிடுகின்றார். குலபாஉர் ராஷிதூன்கள் தமது ஆட்சியின் போது எழுந்த புதிய பிரச்சினைகளை கையாள்வதிலும் ,அவற்றுக்கான தீர்வு வழங்குவதிலும் கூட்டு இஜ்திஹாதையே தங்கியிருந்தார்கள்.

**கலிபா அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் கூட்டு இஜ்திஹாத் நடைமுறைபடுத்தப்பட்ட விதம்**

கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களுடன் யாராவது ஒரு முறைப்பாடு தெரிவித்தால் அவ்விடயம் தொடர்பாக அல்குர்ஆனில், ஸுன்னாவில் தேடுவார்கள். அவ்விடயத்திற்கான பதில் குர்ஆன், ஹதீஸில் கண்டால் அதன் படி தீரப்பு வழங்குவார்கள். குறிப்பிட்ட அவ்விடயம் குறித்த குர்ஆன், ஸுன்னாவில் காணாத போது ஸஹாபக்களை அனைவரையும் ஒன்று திரட்டி குறிப்பிட்ட விடயம் தொடர்பாக அலோசணை செய்து முடிவுக்கு வருவார்கள்.[122]இம்முறைமையிலே புதிதாக தோன்றும் சட்டப்பிரச்சினைக்கும், ஆட்சியுடன் தொடர்புடைய விடயங்களுக்கும் பயன்படுத்தினார்.

உதாரணமாக: குர்ஆன் தொகுக்கப்பட்டமை, ஸகாத் தரமறுத்தவர்களுடனான யுத்தம் போன்றன இம்மறைமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

**உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய காலத்தில் கூட்டு இஜ்திஹாத் நடைமுறைபடுத்தப்பட்ட விதம்**

கூட்டு இஜ்திஹாத் நடைமுறைபடுத்தப்பட்ட மிகச்சிறந்த காலப்பகுதியாக உமர் ரலியல்லாஹு அன்ஹு அடையாளப்படுத்தப்படுகிறது. குறிப்பான சபை மற்றும் பொது சபை என இரு ஆலோசணை சபைகள் இருந்ததென இமாம் அபூ ஸஹ்ரா அவர்கள்

[120] அர் ரஹீகுல் மஹ்தூம்-ஸபிய்யுர் ரஹ்மான் முபாரக்பூரி-பக்:285
[121] தாரீகுல் மதாஹிபில் இஸ்லாமிய்யா-அபூ ஸஹ்ரா-பக்:26
[122] அபூபக்ர் ஸித்தீக் ஸஹ்ஸிய்யதுஹு வ அஸ்ருஹு, அலி முஹம்மத் அஸ்ஸல்லாபி, விஸாரதுல் அவ்காப் லிஸ்ஸுஊனுல் இஸ்லாமிய்யா, பக்:129

குறிப்பிடுகின்றார்கள். குறிப்பான சூரா சபையில் முஹாஜிர்களில் மற்றும் அன்சாரிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பெரிய சஹாபாக்கள் இருந்தனர். பொதுச்சபையில் மதினாவில் வசித்த அனைத்து ஸஹாபாக்களும் இருந்தனர். குறிப்பான சபையில் ஆட்சி விவகாரங்கள் குறித்து ஆலோசணை செய்யப்படும், பொதுச் சபையில் மிக முக்கியமான நாட்டு விவகாரங்கள், அபாய நிகழ்வுகளின்போது ஆலோசணை செய்யப்பட்டும்.[123] இவ்வறாக உமர் (ரலி) கூட்டு இஜ்திஹாதை நடைமுறைபடுத்தினார். அது மட்டுமல்லாது தனது ஆளுகைக்கு கீழ் இருந்த பிரதேசங்களிலும் இம்முறைமையை நடைமுறைப்படுத்துமாறு அந்தந்த பிரதேச ஆட்சியாளர்களுக்கு கட்டளை விதித்திருந்தார்.

உதாரணமாக, ஷாம் மற்றும் ஈராக் பிரதேசங்களில் கைப்பற்றப்பட்ட நிலங்கள் தொடர்பாக பொதுச்சபையில் ஆலோசணை செய்து போரில் ஈடுபட்டவர்களுக்கு மத்தியில் பிரித்து வழங்குவதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்டது.

உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மூத்த ஸஹாபக்களை உள்ளடக்கிய ஒரு சூரா சபையை வைத்திருந்தார். உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சூரா சபையில் இருந்த பலர் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சூரா சபையில் அங்கத்துவம் வகித்துள்ளார் என்பது வரலாற்று ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று அலி (றழி) அவர்களின் காலத்தில் இடம்பெற்ற பின்வரும் நிகழ்வு சட்ட தீர்ப்பு பெறுகின்ற விடயங்களில் கூட்டு இஜ்திஹாத் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. கணவன் தலாக் சொல்லிய பெண் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து தனக்கு ஒரே மாதத்திலேயே மூன்று முறை ஹைல் வெளியாகி விட்டதாக வாதிட்டார. அப்போது அலி (றழி) அவர்கள் ஷுரைஹை பார்த்து இவர் விடயமாக நீர் என்ன சொல்கிறீர்கள்? அதற்கு அவர்கள் அவள்தான் மாதத்தில் மூன்று முறை ஹைலுக்கு உள்ளாகி ஒவ்வொரு முறையும் சுத்தமாகி, சுத்தமான காலத்தில் தொழுகையை நிறைவேற்றியதாக மார்க்கப்பற்றுள்ள அமானிதமான ஒருவரை தனது சொந்தக்காரர்களிலிருந்து சாட்சியாக கொண்டு வந்தாள். அவள் சொல்லுவது ஏற்றுக்கொள்ளப்படும். அவள் உண்மையை சொல்கிறாள் இல்லாவிட்டால் பொய் சொல்கிறாள். அலி (றழி) அவர்கள் ஆம் நீர் சரியாக சொல்லி விட்டீர் என்றார்.

இதுபோன்ற பல சம்பவங்கள் உஸ்மான் மற்றும் அலீ ரழியல்லாஹு அனஹுமா காலத்தில் இடம் பெற்று இருப்பதானது அவர்களின் காலத்தில் கூட்டு இஜ்திஹாத் இடம்பெற்றிருப்பதனை உறுதி படுத்துகிறது.

**மூன்றாவது காலப்பிரிவு: குலபாஉர் ராஷிதீன்களுக்கு பிற்பட்ட காலம்**

குலபாஉர் ராஷிதீன்களின் காலத்தை தொடர்ந்து படிப்படியாக கூட்டு இஜ்திஹாத் சரிவை நோக்கி சென்று கொண்டிருந்தது. இதற்கான முக்கியாமான காரணம் ஸஹாபக்கள் பல இடங்களில் பிரிந்து சென்றமையாகும். உமர் பின் அப்துல் அஸீஸின் காலப்பிரிவையும் உமையாக்காலப்பிரிவின் ஒரு சிறிய காலப்பிரிவை தவிர ஏனைய பெரும்பாலான உமையா அப்பாஸிய ஆட்சி காலக்கட்டகளில் தனிநபர் இஜ்திஹாத் மேலோங்கி இருந்தது.[124]

123 அல்-மத்ஹலுல் பிக்ஹில் ஆம், முஸ்தபா அஹ்மத் ஸர்கா,தாருல் கலம், டமஸ்கஸ், பாகம்:02, பக்:207
124 கூட்டு இஜ்திஹாத் செயன்முறைஈ பிர்னாஸ் அஷ்ரப், பக்:21

உமர் இப்னு அப்துல் அஸீஸ் குலபாஉர் ராஷிதீன்களின் அடிச்சுவட்டை பின்பற்றினார். மூத்த ஸஹாபா சட்ட மேதை உளளடக்கிய சூரா சபை ஒன்றையும் அவர் உருவாக்கினார்.

உமர் இப்னு அப்துல் அஸீஸ் தனது சூரா சபையில் அபூபக்கர் இப்னு சுலைமான், அபூபக்ர் இப்னு அப்துர்ரஹ்மான் போன்ற பெரும் இமாம்களை உள்ளடக்கி இருந்தார். இதற்கு மேலதிகமாக உமையா ஆட்சியின் போது ஒரு சிறிது காலம் பிரச்சனைகளை ஆராய்வதற்கு சூரா சபை ஒன்றை உமையா ஆட்சியாளர்களில் சிலர் பேணிவந்தனர். உமர் இப்னு அப்துல் அஜீஸ் சூரா அமைப்பதன் மூலம் கூட்டு இஜ்திஹாதை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சித்த போதிலும் அதன் பின்னர் வந்த மத்ஹபுடைய காலம் கூட்டு இஜ்திஹாதின் இருண்ட காலப் பகுதியாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது. இக் காலப்பகுதியில் தனிப்பட்ட இமாம்களின் கருத்துக்கள் செல்வாக்கு பெற்று மக்களிடையே வரவேற்பைப் பெற்றதாக மாறியது. விளங்கக்கூறின் தனிநபர் இஜ்திஹாத் இக்காலப்பகுதியில் பிரபல்யம் அடைந்தது. இதன் காரணமாக கூட்டு இஜ்திஹாத் என்ற முறை நாளடைவில் இல்லாமல் போனது. தனிப்பட்ட இமாம்களின் கருத்துக்களை உள்ளடக்கிய மத்ஹபுகள் உருவாகியமை, தகுயியற்றவர்கள் இஜ்திஹாதில் ஈடுபட ஆரம்பித்தமை, இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுவிட்டது என இஸ்லாமிய அறிஞன்களினால் தீரப்பு வழங்கப்பட்டமை போன்ற காரணங்களினால் இஸ்லாமிய உலகில் இஜ்திஹாத் என்ற முறைமை இல்லாமல் போய் அதறகு பதிலாக தக்லீதுடைய போக்கு செல்வாக்கு பெற ஆரம்பித்தது. எனவே ஹிஜ்ரி11,12நூற்றாண்டுகளாகும் போது இஸ்லாமிய உலகை விட்டும் இஜ்திஹாத் என்ற முறைமை முழுமையாக காணமலே போய்விட்டது.

**நான்காவது காலப்பிரிவு: நவீன காலத்தில் கூட்டு இஜ்திஹாத்**

தக்லீத் சிந்தனையின் ஆதிக்கத்தின் பின்னர் வலுவிழந்த கூட்டு இஜ்திஹாத், மீண்டும் நடைமுறைக்கேற்ப இஜ்திஹாத் செய்கின்ற முறை ஒன்றுக்கான அழைப்பு தொடர்ந்தது புத்துயிர் பெற ஆரம்பித்து இவ்வழைப்புகள் நவீன காலத்தை சேர்ந்த பல இமாம்களினால் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக பதிஉஸ்ஸமான் செய்யித் நூர்ஸி, தாஹிர் இப்னு ஆஸூர், முஹ்தபா அஹ்மத் ஸர்கா, முஹம்மத் தஸூகி, யூசுப் அல் கர்ளாவி போன்ற பல இஸ்லாமிய அறிஞர்களினால் மேற்பட்டது.[125]

தாஹிர் இப்னு ஆஷூர் பின்வருமாறு கூட்டு இஜ்திஹாதை நோக்கி அழைப்பு விடுக்கிறார்.

எல்லா பிரதேசங்களிலும் இருந்தும் ஷரீஆகலையை கற்ற, மத்ஹபுகள் வேறுபாடுகளை கடந்த பெரிய அறிஞர்களை உள்ளடக்கிய ஒரு அறிவியல் மன்றம் ஒன்றை அமைப்பது தான் கூட்டு இஜ்திஹாத் பணியை நிறைவேற்றுவதற்கான முதல் எட்டு இம்மன்றத்தில் சமூகத்தின் தேவைப்பாடுகள் பற்றி அலசப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வழங்கப்படும்.[126]

இவ்வாறான அழைப்புகள் கூட்டு இஜ்திஹாதை மேற்கொள்கின்ற மன்றங்கள், நிறுவனங்கள் இஸ்லாமிய உலகில் தோற்றம் பெற காரணமாக இருந்தது. இதன் ஆரம்ப புள்ளியாக

125 ஆல்-இஜ்திஹாதுல் ஜமாஈ பீ தஸ்ரீஇல் இஸ்லாமி, பக்:57
126 மகாஸிதுஸ் ஸரீஆ அல் இஸ்லாமிய்யா, முஹம்மத் தாஹிர் இப்னு ஆசூர், பக்:409

1961ம் ஆண்டு எகிப்தில் உருவாக்கப்பட்ட கூட்டு இஜ்திஹாத் நிறுவனத்தை குறிப்பிடமுடியும்.

**தற்காலத்தில் கூட்டு இஜ்திஹாத் நடைமுறையும் அது எதிர்கொள்கின்ற சவால்களும்**

கூட்டு இஜ்திஹாதை நோக்கிய இஸ்லாமிய அறிஞர்களின் அழைப்பைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்த இஜ்திஹாதின் வாயில் மீண்டும் திறக்கப்பட்டு இஸ்லாமிய உலகில் இஜ்திஹாத் கூட்டு இஜ்திஹாத் என்ற அடிப்படையில் இமாம்களின் ஒருமித்த கருத்தோடு நிறைவேற்றப்பட ஆரம்பித்தது. இவ்வாறு நிறைவேற்றப்படும் கூட்டு இஜ்திஹாதை ஆய்வு செய்கின்ற விடயஙங்களின் பொதுத்தன்மை என்பவற்றின் அடிப்படையில் மூன்று வகையாக நோக்கலாம்.

- பிராந்திய அடிப்படையிலான கூட்டு இஜ்திஹாத்: இங்கு குறிப்பிட்ட பிராந்தியத்தியற்கு உரிய தனித்துவமான விவகாரங்கள் ஆராயப்படும். மேலும் இவ்வாய்வில் அப்பிராந்தியத்தை சேர்ந்த அறிஞர்களே ஈடுபடுவார்கள். அவர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் தீர்வுகள் பெறப்படும்.
- பிரதேசத்தை மையப்படுத்தி கூட்டு இஜ்திஹாத்: மேலே குறிப்பிட்டதை போன்றே இங்கும் அப்பிரதேசத்தை மையப்படுத்திய பிரச்சினைகளை அப்பிரதேசத்தை சேர்ந்த அறிஞர்களின் ஒருமித்த கருத்தின் அடுப்படையில் தீர்த்துவைக்கப்படும்
- சர்வதேச கூட்டு இஜ்திஹாத்: பிரதேச, பிராந்திய அமைப்புகளை கடந்து சர்வதேச முஸ்லிம் உம்மா எதிர் நோக்கும் பிரச்சினைகளை, மொத்த முஸ்லிம் உம்மதையும் பிரிதி நிதிப்படுத்தும் அறிஞர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, அவர்களின் ஒருமித்த கருத்துடன் தீர்வு பெறப்படும்.

இவ்வமைப்பின் அடிப்படையில் பல பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழஙகப்பட்டுள்ளன. உதாரணமாக ஆர்டிக், அண்டார்டிக் பிரதேசங்களில் தொழுகை நேரத்தை நிர்ணயித்தல், மனிதனது உடல் உறுப்பு தானம், பரிசோதனைக்குழாய் குழந்தைகள் போன்ற புதிய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் முன்வைக்கப்பட்டன.

அதேபோன்று இவ்வகையான கூட்டு இஜ்திஹாத் முயறசிகளும் இன்றளவில் நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பிலே இஸ்லாமிய உலகில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பெரும்பாலும் இந்நிறுவனங்கள் நாடுகளை மையப்படுத்தியதாகவே தமது கூட்டு இஜ்திஹாத் பணியை மேற்கொள்கின்றன.

இந்நிறுவனங்களின் முதன்மையான நிறுவனமாக அல்அஸ்ஹரை மையப்படுத்தி இயங்கி வரும் இஸ்லாமிய ஆய்வு மன்றத்தை குறிப்பிடலாம். இம்மன்றம் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சட்டமூலத்துக்கு அமைய (ஹி1381 ) 1959ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இம்மன்றத்தின் முக்கிய பணிகளாக இஸ்லாமிய ஆய்வு பணிகளில் ஈடுபடுதல், மத்ஹப் வெறியை கடந்து இஸ்லாமிய கல்விப் பாரம்பரியத்தை புத்தாக்கம் செய்ய உதவி செய்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.[127]

[127] அல்-மத்ஹலுல் பிக்ஹில் ஆம், முஸ்தபா அஹ்மத் ஸர்கா,தாருல் கலம், டமஸ்கஸ், பாகம்:02, பக்:250

மேலும் இன் நிறுவனத்தின் தலையாய பணியாக சமூகத்தில் அவ்வப்போது தலைதூக்கும் புதிய தோற்றப்பாடுகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கு காலத்துக்கு தேவையான தீர்வுகளை முன்வைப்பதாகும். இதுவே நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மிக முக்கியமான பணியாகும். அதேபோன்று நிறுவனமானது அனைத்து மத்கப்களை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட அறிஞர்களை கொண்டு தனது கூட்டு இஜ்திஹாத் பணியை மேற்கொண்டு வருகிறது.

இதே போன்று மக்காவை மையமாகக் கொண்ட பிக்ஹ் மன்றம் 1978 ஆம் ஆண்டிலும், இஸ்லாமிய மாநாடுகளின் ஒன்றியத்தின் பிக்ஹ் மன்றம் 1984 ஆம் ஆண்டிலும் உருவாக்கப்பட்டன.

**கூட்டு இஜ்திஹாத் நடைமுறைப்படுத்துவதில் எழுந்துள்ள சவால்கள்**

இன்றளவில் இஸ்லாமிய சட்டவாக்க பொறிமுறையில் கூட்டு இஜ்திஹாதை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறுபட்ட சவால்கள் எழுந்துள்ளன. கூட்டு இஜ்திஹாத் செயல்பாட்டை நலிவடைய செய்வதுடன் காலத்திற்கு ஏற்றாற்போல் தீர்வுகளை முன்வைக்கின்ற பாணியையும் மந்தப்படுத்துகிறது. எனவே சவால்கள் ஆராயப்பட்டு அவற்றுக்கான சிறந்த முன்மொழிவுகளை முன்வைப்பது கூட்டு இஜ்திஹாதின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு, வினைத்திறனான செயற்பாட்டிற்கு வழியமைக்கும்.

**1) அரசியல் கெடுபிடிகளும் அவற்றின் தாக்கங்களும்**

சமூகம் வேண்டி நிற்கின்ற சிவில் வாழ்க்கையுடன் தொடர்புடைய புதிய பிரச்சினைகளுக்கான தீர்வு சொல்வதற்கான அறிஞர்களது கருத்துச் சுதந்திரம் வரையறுக்கப்படுவதே இதன் மூலமாக நடப்படுகிறது அறிஞர்களின் சிந்தனை மீதான கட்டுப்பாடுகள் இந்நிறுவனங்களில் வெளியிடப்படுகின்ற பத்வாக்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்த என்ற அளவுக்கு மாறியுள்ளது ஏனெனில் இன் நிறுவனங்களில் இருந்து வெளிவரும் பத்துவாக்கள் அதிகாரத்தின் உள்ளவர்களை திருப்திபடுத்தும் நோக்கிலேயே வெளியிடப்படுகிறது.எனவே அரசியல் ரீதியான கெடுபிடிகள் கூடட்டு இஜ்திஹாதை தனது பணியை விட்டும் தூரப்படுத்துகிறது.

**2) இந் நிறுவனங்களில் பூரணமான ஒருங்கிணைப்பு இன்மை**

ஒருங்கிணைப்பு இன்மை இன் நிறுவனங்களில் ஏற்படுவதற்கான மிக முக்கியமான காரணம் இந்நிறுவனத்துக்கு நிலவுகின்ற பல் வேறுபட்ட கருத்துக்களும் அதன் அடியாக எழுந்துள்ள பல்வேறுபட்ட இஜ்திஹாத்கள் இவ்வாறான ஒத்ததன்மை, ஒருங்கிணைவு இல்லாமல் போவதென்பது குறிப்பிட்ட ஒருவர் அல்லது இருவருடைய கருத்தை மாத்திரம் நடைமுறைபடுத்துவதை நோக்கி இட்டுசெல்லும் இது கூட்டு இஜ்திஹாத் என்ற முறைமையுடன் முழுமையாக முரண்பட்டதாக அமைந்துவிடுகின்றது.

**3) உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முறைமை**

தற்போது இஸ்லாமிய நாடுகளில் நடைமுறையில் உள்ள முறைமையை எடுத்து நோக்கினால் பெரும்பாலான நாடுகளில் அரசாங்கமே இன் நிறுவனங்களுக்கான முஜ்தகிதுகளை நியமிக்க என்ற ஒரு முறைமையை காண முடிகின்றது. இதற்கான

அதிகாரம் யாப்பினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது உண்மையில் இந் நியமிப்பு முறையானது நிறுவனங்களின் செயற்பாடுகளை சிறந்த முறையில் அமைத்துக் கொள்வதும் பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது.[128]

**4) சரிஆ துறை அறிஞர்கள் இடையே நிலவும் அறிவு ரீதியான தேக்கநிலை**

இது கூட்டு இஜ்திஹாதின் எல்லா முயற்சிகளுடன் முரண்படக்கூடியது. அடிப்படையில் அடுத்தவரை ஏற்றுக்கொள்ளும் மனோநிலைமையில்லை என்றால் எவ்வாறு கலந்துரையாடல், கருத்து பரிமாற்றம் என்பன இடம் பெறும்? . கூட்டு இஜ்திஹாத் என்பது தீர்வுகளை பெறுவதற்கான ஒன்றிணைப்பை குறிக்கிறது. ஆனால் அறிவு ரீதியான தேக்கநிலை இவ் ஒருங்கிணைப்பை குலைக்கிறது.

ஏனெனில் இது தன்னை மட்டும் சரிகண்டு அடுத்தவர்களை பிழையென என்னும் மனப்பான்மை ஏற்படுத்துகின்றது. எனவே இங்கு ஒத்துழைப்பு என்பதே இடம்பெற மாட்டாது. கூட்டு முயற்சி என்பதை இல்லாமல் போய்விடும் எனவே அறிவியல் ரீதியான தேக்க நிலை கூட்டு இஜ்திஹாதிற்கான முக்கியமான சவாலாகும்.

**5) நிறுவனங்களில் தோன்றுகின்ற சில இயலாமைகள்**

அறிவையும், ஆய்வையும் மையப்படுத்திய இந் நிறுவனங்களுக்கு பண ரீதியான உதவிகள், சமூகத்தின் மத்தியிலிருந்து கிடைக்கின்ற ஆதரவு ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. இதனால் இந்நிறுவனங்கள் எதிர்பார்க்கப்படுகின்ற சட்டவாக்க பணியை சரிவர நிறைவேற்ற முடியாமல் உள்ளது. பண ரீதியான உதவிகள் கிடைகாமையால் இன்நிறுவனங்களுக்கு தமது ஆய்வுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியாமல் உள்ளது. எனவே தமக்கு கிடைக்கின்ற நூல்கள் மற்றும் கள ஆய்வுகளை கொண்டு கூட்டு இஜ்திஹாதை மேற்கொள்வது இஜ்திஹாதிற்கு பதிலாக தக்லீத் இடம்பெற காரணமாக அமைகிறது.

**6) ஆய்வு மன்றங்களின் பற்றாக்குறை**

இஸ்லாமிய உலகில் கூட்டு இஜ்திஹாத் தனது பணியை சரியான முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்கு துறைசார் ஆய்வு நிலையங்களின் பால் அதிகம் தேவை உடையதாய் இருக்கிறது. ஆனால் இஸ்லாமிய உலகை பொருத்தவரையில் இவ்வாய்வு மன்றங்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. குறிப்பாக மருத்துவம், வானவியல், புள்ளிவிபரவியல் போன்ற இஸ்லாமிய துறைகளுக்கு வெளியே உள்ள துறைகள் சம்பந்தமாக ஆய்வு செய்கின்ற நிறுவனங்களின் பற்றாக்குறை நிலவுகின்றது. எனவே எதிர்பார்க்கப்படுகின்ற விளைவே பெறுவது கடினமாக உள்ளது.

**7) கூட்டத் தொடர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றமை**

இதனை நாம் பொதுவாக இன்றளவில் இயங்குகின்ற எல்லா கூட்டி இஜ்திஹாத் நிறுவனங்களிலும் அடையாளப்படுத்த முடிகிறது உதாரணமாக சவுதி அரேபியாவை

[128] முஅஸ்ஸஸாத் ஆல்-இஜ்திஹாதுல் ஜமாஈ, அஹ்மத் அப்துல்லாஹ் துவைஹி, றறற.யடரமயா.நெவ

மையமாகக் கொண்டு இயங்குகின்ற இஸ்லாமிய அறிஞர்கள் அது ஒன்றியத்தின் யாப்பிலே வருடத்திற்கு இரண்டு முறையும் மாத்திரம் கூடுவது போதுமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஜித்தாவில் இயங்கி வருகின்ற பத்வாக்கள் மற்றும் ஆய்வுகளுக்கான மன்றத்தின் யாப்பில் வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் கூடுவது போதுமானது என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு குறைந்த எண்ணிக்கையிலான ஒன்றுகூடல்கள், கூட்டு இஜ்திஹாதின் பணியை சரியாக செய்வதை விட்டும் நிறுவனங்களை தாமதப்படுத்துவதோடு, காலத்துக்கு காலம் எழுகின்ற பிரச்சனைகளுக்கான சரியான தீர்வுகளை முன் வைப்பதை விட்டும் நிறுவனங்களை பாராமுகம் படுத்துகிறது. இதனால் இஸ்லாம் பற்றிய பிழையான பார்வை சமூகத்திலேயே தோன்றுகிறது. இதற்கு உதாரணமாக 9.̇.11இல் பிரச்சினையை குறிப்பிடலாம். இந்நிகழ்வின் போது இது தொடர்பாக எந்த ஒரு இஸ்லாமிய இயக்கங்களும் நிறுவனங்களும் கருத்து வெளியிடவில்லை. அதற்கான மிக முக்கியமான காரணம் தேவைகளுக்கு ஏற்ப ஒன்று கூட படுவதற்கான எந்த ஒரு ஒழுங்குகளும் இந் நிறுவனங்களிடையே இடையே காணப்படவில்லை இதனால் இஸ்லாம் பற்றிய ஒரு பிழையான புரிதல் உலக அரங்கில் உருவாகியுள்ளது.[129]

**சவால்களுக்கான முன்மொழிவுகள்**

1) அரசியல் ரீதியான கெடுபிடிகளை இல்லாமல் செய்ய இந் நிறுவனங்களை நீதித்துறை போன்று தனித்து செயற்படுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். மேலும் இவ் அனுமதி நாட்டின் யாப்பு ரீதியாக வழங்கப்பட்டு இந் நிறுவனங்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளிக்க வேண்டும். ஏனெனில் உண்மைத்தன்மை அக்குழுவின் சுதந்திரமான தன்மையுடன் தங்கியிருக்கின்றது. அதாவது அதில் ஈடுபடும் முஜ்தஹித் எந்த விதமான சிந்தனை ரீதியான அழுத்தங்களுக்கும், அரசாங்கத்திலிருந்து வரும் அழுத்தங்களுக்கும் உட்படாமல், எந்தவிதமான நிகழ்ச்சி நிரலுக்கும் உட்படாமல் இயங்குகின்ற பொழுதே அவர்களினால் நடுநிலையான தீர்வுகளை பெற முடியும்.[130]

2) ஒருங்கிணைப்பு இந் நிறுவனங்களில் மிகவும் வேண்டப்பட்ட ஓர் விடயமாக இருக்கிறது. ஒருங்கிணைப்பு வெறுமனே ஒரு குறிப்பிட்ட விடயத்தை தீர்வாக மாநாட்டில் அறிவிப்பதற்கு மாத்திரம் வேண்டப்படுவது கிடையாது.
மாற்றமாக இந் நிறுவனங்கள் செயற்படுகின்ற முறைமையை தீர்மானிப்பதிலும் அதே போன்று சட்டங்களை நடைமுறைப்படுத்தல்,தீர்மானங்களுக்கு வருதல் போன்ற விடயங்களில் சமூகத்துக்கு மத்தியில் ஒத்ததன்மையை ஏற்படுத்துவதற்கும் இது வேண்டப்படுகிறது. கூட்டு இஜ்திஹாதை நடைமுறைப்படுத்துவதற்கு இந் நிறுவனங்கள் மூன்று பகுதிகளில் ஒருங்கிணைப்பை கொண்டுவரப்பட வேண்டும் முதலாவது அரசின் அதிகாரத்துக்கு உட்படாமல் சுதந்திரமாக செயல்படக்கூடிய உறுப்பினர்களை நியமிப்பதில் ஒருங்கிணைவு காணப்படவேண்டும் முன்னுரிமை வழங்கப்பட்டு, தீர்மானிக்கப்பட வேண்டிய சட்டப் பிரச்சினைகளை அறிந்து

[129] முஅஸ்ஸஸாத் ஆல்-இஜ்திஹாதுல் ஜமாஈ, அஹ்மத் அப்துல்லாஹ் துவைஹி, www.alukah.net
[130] அப்ஹாஸுன் பில் மைதான், அஹ்மத் ரைஸூனி, தாருல் கலிமா, மூன்றாம் பதிப்பு, பக்:68

கொள்வதிலும், வகைப்படுத்துவதிலும் ஒருங்கிணைவு இடம்பெறவேண்டும் அறிவு ரீதியான வளமான முடிவை பெற பல்வேறுபட்ட தீர்வுகளை மேற்கொள்ளுகின்ற நிறுவனங்கள், அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைவு கொண்டுவரப்படவேண்டும்.

3) அறிவு ரீதியான தேக்க நிலையை இல்லாமல் செய்வதற்கு சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவர்களும் தனிப்பட்ட கருத்துக்களுக்கு அப்பால் கூட்டுணர்வு பற்றிய அறிவை ஏற்படுத்த வேண்டும்,ஒவ்வொருவருக்கும் கூட்டு முயற்சியில் உள்ள பங்கினை உணர்த்த வேண்டும். இதுவே தனிநபர் இஜ்திஹாத் என்ற நிலையிலிருந்து கூட்டு இஜ்திஹாத் என்ற நிலைக்கு மாறுவதற்கு ஒரு சிறந்த சூழ்நிலையை உருவாக்குவதுடன்,ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட துறைகளில் முன்வைக்கின்ற கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கான மனப்பான்மையையும் ஏற்படுத்தும்.[131]

4) அரசாங்கத்தினால் நியமிக்கின்ற முறைமை எல்லா விடயங்களுக்கு பொருத்தமாக இருந்தாலும் இஜ்திஹாதுடன் தொடர்பு படுகின்ற விடயங்களுக்கு அது பொருத்தமற்ற தாகவுள்ளது. ஏனெனில் முஜ்தகித் என்பது அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற ஒரு பதவியல்ல மாற்றமாக அறிவு ரீதியாக பெறப்படுகின்ற முதிர்ச்சி நிலையாகும். எனவே நிறுவனங்களுக்கான முஜ்தகிதுகள் பல்கலைக்கழகங்கள், கல்விநிறுவனங்களிலிருந்து சுயாதீனமான முறையில் தெரிவு செய்யப்பட வேண்டும். அப்போதுதான் தகுதி உடையவர்கள் இவ் பணியில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், கூட்டு இஜ்திஹாதை திறன்பட மேற்கொள்ள முடியும்.

5) ஆரம்பமாக இதுபோன்ற அறிவியல் துறைகளுக்கு பணம் செலவிடுவதற்கு மக்களை இஸ்லாமிய அறிஞர்கள் வழிநடத்த வேண்டும். மேலும் இதுபோன்ற அறிவியல் முயற்சிகளுக்கு ஸகாத் மற்றும் வக்ப் போன்ற இஸ்லாமிய முறைகளில் பண மூலங்களிலிருந்து பெருமளவு பணம் ஒதுக்கப்பட வேண்டும் இதன்போதே இந்நிறுவனங்கள் தமது ஆய்வினை விசாலமான பரப்பில் மேற்கொண்டு கூட்டு இஜ்திஹாத் என்ற முறைமையை உண்மையான முறையில் நடைமுறைப்படுத்தி இக் காலத்துக்குரிய தீர்வுகளை பெற முடியும்.

6) இந்நிறுவனங்களின் கூட்ட தொடர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அது தொடர்பாக சில திருத்தங்களை இந் நிறுவனங்களில யாப்புக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது இந்நிறுவனங்களின் கூட்டத்தொடர் இடம்பெறுவது நிறுவனங்களின் யாப்பின் மூலமாக கட்டாயப் படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் இந் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பணியை சரியாக நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அதே போன்று இக் காலத்திற்கேற்ப சிறந்த முறையில் இஸ்லாத்தை முன்வைக்கவும் முடியும்.

[131] முஅஸ்ஸஸாத் ஆல்-இஜ்திஹாதுல் ஜமாஈ, அஹ்மத் அப்துல்லாஹ் துவைஹி, www.alukah.net

7) இஸ்லாமிய துறைக்கு வெளியே ஆய்வு செய்யப்பட வேண்டிய பல முக்கிய துறைகள் சம்பந்தமான ஆய்வு மன்றங்கள் கட்டாயம் இஸ்லாமிய அரசுகளினால் நிர்ணயிக்கப்பட வேண்டும் அதற்கான பெருந்தொகையான பணம் அரசாங்கத்தின அமைச்சுக்களினால் ஒதுக்கப்பட வேண்டும். இதன்போதே கூட்டு இஜ்திஹாதை சரிவர நடைமுறைப்படுத்த முடியும். மேலும் கூட்டு இஜ்திஹாத் வேண்டி நிற்கின்ற ஆய்வு மன்றங்களை உருவாக்கி அதன் வழியில் ஆய்வுகளை மேற்ொள்கின்ற பொழுது தற்காலத்துக்கு உரிய முறையில் இஸ்லாத்தை முன்வைக்க முடியும்

**ஆய்வின் முடிவுகள்**

இவ் ஆய்வின் முடிவுகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்

1) இஸ்லாமிய சட்டவாக்க பொறிமுறைகளில் மிக முக்கியமானதோர் பொறிமுறையாக கூட்டு இஜ்திஹாத் விளங்குகிறது.

2) இப் பொறிமுறை ஏனைய சட்டவாக்க பொறிமுறைகளை விட காலத்தால் முந்தியது. இதனது வரலாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் துவங்குகிறது.

3) இஸ்லாமிய வரலாற்றின் திருப்பு முனையாக அமைந்த பல தீர்வுகளின் பின்னால் கூட்டு இஜ்திஹாத் எனும் இம் முறைமையே இருந்துள்ளது.

4) தனிநபர் இஜ்திஹாத் தனிக் கலையாக இஸ்லாமிய வரலாற்றில் தோற்றம் பெறுவதற்கு முன்னரே கூட்டு இஜ்திஹாத் தோற்றம் பெற்று நடைமுறையில் இருந்துள்ளது.

5) தனிநபர் இஜ்திஹாத் ஏற்பட்ட பல குழப்பங்கள் காரணமாக இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டது மீண்டும் இஜ்திஹாதின் வாயிலை நவீன காலத்தில் கூட்டு இஜ்திஹாத் என்ற இவ்வமைப்பே திறந்துள்ளது.

6) கூட்டு இஜ்திகாத் முறைமையை தனிநபர் இஜ்திஹாதை விட பாதுகாப்பானதும் நம்பகத் தன்மையானதுமாகும்.

7) இந் நூற்றாண்டு அதிகமாக ஆய்வுகளுக்கு முக்கியம் கொடுக்கின்ற தோர் நூற்றாண்டு ஆகும் அந்த வகையில் ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட கூட்டி இஜ்திஹாதே இந் நூற்றாண்டின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது.

8) கூட்டு இஜ்திஹாத் சமூகத்தின் எல்லா மட்டத்தினரையும் எல்லா துறைசார் நிபுணர் களையும் உள்ளடக்கி இருப்பதால் அது சமூகத்தின் எல்லா மட்டத்தினரதும் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் சமூகத்தின் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது.

9) நடைமுறையில் கூட்டு இஜ்திஹாத் அரசியல் ரீதியான கெடுபிடிகள், நிறுவனங்களுக்குள் ஒருங்கிணைப்பு இன்மை, அறிவு ரீதியான தேக்க நிலை போன்ற பல சவால்களுக்கு முகம் கொடுத்த வண்ணம் உள்ளது

10) இச் சவால்கள் கூட்டு இஜ்திஹாதை தனது பணியை விட்டும் மந்தப்படுத்தனால், இஸ்லாம் பற்றிய சரியான புரிதலை மக்கள் மயப்படுத்த முடியாமல் உள்ளது எனவே இச் சவால்களை சரியான முறையில் முறியடித்து கூட்டு இஜ்திஹாதை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களை சுதந்திரமாகவும் இயல்பாகவும் செயல்பட அனுமதிப்பது இந்நிறுவனங்களில் பணியை சரிவர செய்வதற்கு சந்தர்ப்பமாக அமையும்

11) கூட்டு இஜ்திஹாத் மிக முக்கியமான பணி தற்காலத்தில் எழுகின்ற சட்டப் பிரச்சனைகளுக்கான இஸ்லாமிய தீர்வுகளை நடைமுறைப் படுத்தும் வகையிலான சட்டங்களாக முன்வைப்பதாகவும் இங்கு எல்லா வகையான ஆதரவுகளையும் இஸ்லாமிய அரசுகள் நல்குவது கூட்டு இஜ்திஹாதின் நடைமுறையை இன்னும் வினைத்திறன் மிக்கதாக மாற்றும்.

**முடிவுரை**

இஸ்லாமிய சட்டவியல் பொறிமுறையில் மிக முக்கியமானதோர் அம்சம்தான் இக்கூட்டு இஜ்திஹாத் ஆகும் இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலம் தொட்டு இஸ்லாமிய வரலாற்றில் நடைமுறையில் இருந்து வருகின்றது. மேலும் இம்முறையானது ஒவ்வொரு காலத்திலும் எழுகின்ற பிரச்சனைகளுக்கான மிகச் சரியான தீர்வை அறிவுபூர்வமாகவும் முன்வைக்கிறது. .அத்தோடு இஸ்லாம் எக்காலத்துக்கும் பொருத்தமானது என்ற இஸ்லாத்தின் உயர்ந்த தன்மையையும் இது பாதுகாத்து வருகிறது. இவ்வாறு எல்லா வகையிலும் கூட்டு இஜ்திஹாத் முக்கியத்துவம் பெறுகின்றது. இன்றளவில் இஸ்லாமிய உலகிலும் ஏனைய முஸ்லிம், சிறுபான்மையாக வாழும் நாடுகளிலும் நடைமுறைப் படுத்தப்படுகின்ற கூடடு இஜ்திஹாத் அமைப்பானது இஜ்திஹாத் என்ற அமைப்பினை விட்டு வெளியே செல்கிறது.இதற்கான மிக முக்கியமான காரணம் இவ் அமைப்புக்கள் எதிர்நோக்குகின்ற சவால்களாகும். இவற்றுள் மிக முக்கியமானவை அரசியல் ரீதியான கெடுபிடிகள், நிறுவனங்களுக்குள் ஒருங்கிணைப்பு இன்மை, அறிவு ரீதியான தேக்க நிலை போன்றனவாகும். எனவே இவ் ஒழுங்கீனங்கள் களையப்பட்டு கூட்டு இஜ்திஹாத் நடைமுறைப்படுத்தப்படும் போது இவற்றினால் வெளிவருகின்ற தீர்ப்புகள் காலத்தின் தேவையை நிறைவேற்ற கூடியதாக இருப்பதுடன் இஸ்லாத்தை எக்காலத்துக்கும் பொருத்தமானது என்பதனை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். எனவே இவ்வாறான ஒழுங்குபடுத்தல்களுடன் கூட்டு இஜ்திஹாதை நடைமுறைப்படுத்தும் போது வெளிவருகின்ற தீர்வுகளாகவும் புதிய இஜ்திஹாத் ஆக அமைவதுடன் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுகளாகவும் அமையும்.

**உசாத்துணைகள்**


1. அஹ்மத் ரைஸூனி, அப்ஹாஸூன் பில் மைதான், தாருல் கலிமா, மூன்றாம் பதிப்பு.
2. ஷ.்.பான் முஹம்மத் இஸ்மாஈல்- இஜ்திஹாத் ஜமாஇ, தாருஸ் ஸலாம் முதலாம் பதிப்பு, கெய்ரோ.
3. இமாம் குர்துபி- தப்ஸீர் ஜாமிஉல் அஹ்காம்- பாகம்:5, கெய்ரோ.
4. இமாம் இப்னுல் கையிம் ஜவ்ஸி, பீ அ.்.லாமி முவக்கிஈன்- குல்லியது அஸ்ஹர், முதலாம் பதிப்பு.
5. ஸ.்.பிய்யுர் ரஹ்மான், அர்ரஹீக் அல்மக்தூம், தாருல் ஹுதா.
6. கலாநிதி அலிமுஹம்மத் ஸல்லாபி- அபூபக்ர் ஸித்தீக் ஸஹ்ஸிய்யதுஹு வ அஸ்ருஹு, விஸாரதுல் அவ்காப் லிஸ்ஸுஊனுல் இஸ்லாமிய்யா.
7. அல் இஜ்திஹாதுல் ஜமாஈ அஹம்மியதுஹு பீ அஸ்ரில் ஹதீஸ், ஆய்வுச் சஞ்சிகை
8. அப்துல் மஜீத் அஸ்-ஸூஸஹ் அஸ்-ஸரபி, அல் இஜ்திஹாதுல் ஜமாஈ பித் தஷ்ரீஇல் இஸ்லாமி, ரிஆஸதுல் மஹாகிம் அஸ்-ஸரஇய்யா-கட்டார்,

9. மஜல்லதுல் முஸ்லிம் அல் முஆஸிர், மலர்:115
10. அபூ ஸஹ்ரா, தாரீகுல் மதாஹிபில் இஸ்லாமிய்யா, தாருல் பிக்ரில் அரபி-எகிப்து, இரண்டாம் பதிப்பு.
11. முஸ்தபா அஹ்மத் ஸர்கா,அல்-மத்ஹலுல் பிக்ஹில் ஆம், தாருல் கலம், டமஸ்கஸ், பாகம்:02
12. பிர்னாஸ் அஷ்ரப், கூட்டு இஜ்திஹாத் செயன்முறை.
13. முஹம்மத் தாஹிர் இப்னு ஆசூர், மகாஸிதுஸ் ஸரீஆ அல் இஸ்லாமிய்யா, தாருன் நபாஇஸ், அர்தூன்
14. www.alukah.net.